இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 08.12.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 23° செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 13°செ முதல் 19°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது.

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- தற்போதைய வானிலையில் ஆந்ராக்ஸ் நோய் பரவ வாய்ப்புள்ளதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் நோய் தடுப்பூசி போடவும்.
- தற்போதைய வானிலை மஞ்சளில் இலைப்புள்ளி நோய்க்கு சாதகமாக இருப்பதனால், 1 லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது மேன்கோசெப் 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- வறண்ட வானிலை நிலவுவதால் பூக்கும் பருவத்திலுள்ள ஒரு எக்டர் சம்பா நெல்லுக்கு 3வது மேலுரமாக தழைச்சத்து 38 கிலோவும் சாம்பல்சத்து 12.5 கிலோவும் இட்டு நீர் பாசனம் செய்யவும்.
- குறைந்த தட்பவெப்ப நிலை குறைந்து காணப்படுவதால் குலைநோய் வர வாய்ப்புள்ளது. எனவே ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிமை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 29°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 3 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- சம்பா,தாளடி நெற்பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 22 கிலோ யூரியா + ஜிப்சம் 18 கிலோ + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ ஙீரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் இடவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும். (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- சம்பா நெற்பயிரில் புகையான் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நெல்வயலில் பட்டம் பிரித்து தண்ணீர் வடித்து காற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் புகையான் தாக்குதலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம். இதனைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால் ஏக்கருக்கு தயோமித்தாக்சாம் 40 கிராம் அல்லது ∴புப்ரோபைசின் 25 எஸ்.சி. 320 மில்லி என்ற அளவில் தூர் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும்.
- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.

**தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 30°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 88 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் நெற்பயிரில் தண்டுதுளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. தண்டுதுளைப்பானை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் என்ற முட்டை ஒட்டுண்ணியையும் இலைச்சுருட்டுப்புழுவினை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா சிலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை 1,00,000/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் 11 கிலோ / எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் பருத்தியில் தண்டுக்கூன் வண்டு மற்றும் வேரழுகல் நோயின் தாக்குதல் காணப்படுகிறது. தண்டுக்கூன் வண்டை கட்டுப்படுத்த பகுதி தெளிப்பாக 0.1 சத கார்பன்டசிம் அல்லது 0.05 சதம் பினோமில் இவற்றில் ஏதேனும் ஒன்றை பாதிக்கபட்ட செடியின் அருகில் மண் நனையுமாறு ஊற்றவும். வேரழுகல் நோயினை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட மருந்தில், ஏதேனும் உன்றை தெளிக்கவும். கார்பரில் 50 WP @ 2.5 கிலோ /

எக்டர் கார்போபியூரான் 3G @ 33.3 கிலோ / எக்டர் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டசெடிகளின் இலைகள் சுருக்கங்களுடன் மேல் நோக்கி சுருண்டு காணப்படும் இலைக்காம்பு நீண்டு இருக்கும் இப்பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 3 மி.லி / 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமீத்தோயேட் 30% EC @ 1 ம.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

- மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் சுருக்கங்களுடன் மேல் நோக்கி சுருண்டு காணப்படும். இலைக்காம்பு நீண்டு இருக்கும். இப்பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 3 மி.லி / 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமீத்தோயேட் 30% EC @ 1 ம.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 25°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 17°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 21°செ முதல் 22°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் மழை மற்றும் பனிமூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இதனை கட்டுபடுத்த தாவர பூச்சிகொல்லியானஅசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம்.
- ✓ தற்போது நிலவும் குளிர்ந்த வானிலையின் காரணமாக பருத்தி செடியில் காணப்படும் சாறு உறிஞ்சும் பூச்சியின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 என்ற அளவில் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். தேவைப்படின் இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல். ஒரு ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ மிதமான மழையின் காரணமாக மண்ணில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரம் மற்றும் நுண்ணூட்டங்களை வைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளலாம்.
- ✓ மழைக்கால வானிலை நிலவுவதால், காய்கறிப் பயிர்களில் வேர் அழுகல் நோய் தாக்கக்கூடும். இதற்கு பாதிக்கபட்ட இடத்தில் கார்பென்பாசிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1கிராம் என்ற விகிதத்தில் கலந்து ஊற்ற வேண்டும்.
- ✓ மழைக் காலங்களில் தங்களது கால்நடைகளை கோமாரிநோய் தாக்குதல் ஏற்படும் மேலும் சப்பைநோய், தொண்டை அடைப்பான் நோய் , குடற்புழுக்கள் மற்றும் உருண்டைபுழுக்கள் தாக்குதல் காணப்படும். இதன் காரணமாக மாடுகள், கன்றுகளில் கழிச்சல், வயிற்றுப்போக்கு ஏற்படும், இதனைத் தடுக்க மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 3 மற்றும் 6 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

\

**4. மலைப்பிரதேச மண்டலம்**

*வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் இலேசானமேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 18°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 5°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 60 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை வராது என எதிர்பார்க்கப்படுகிறது.*
- ✓ *இளஞ்சிவப்பு நிற பாக்டீரியாவை (PPFM) பயிர்களின் மீது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10மில்லி என்ற அளவில் தெளிப்பதன் மூலம் மற்றும் வேர்உட் பூசனத்தை ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவில் பயிர் நடவின் போது இடுவதன் மூலம் வறட்சி காலத்தில் பயிர்களை பாதுகாக்க முடியும்.*

**5. வடமேற்கு மண்டலம்**

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டம் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 65 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ➢ *வடகிழக்கு பருவ மழையின் தாக்கம் ஏதும் இல்லாததால், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் மீண்டும் சற்றே உயர்ந்தும் இயல்பான காற்றின் வேகம் காணப்பட்டு, கோழிகளுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலையே காணப்படும். தீவன எடுப்பு இயல்பாகவோ அல்லது சற்சே இயலபை விட அதிகமாகவோ காணப்பட்டு முட்டையின் வடை இயலபாகவோ இருக்கும்.*
- ➢ *தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை, உளுதுந்து, பாசிபயறு, துவரை மற்றும் பருத்தி போன்ற பயிர்கள் நீர் பற்றாக்குறையினால் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது, இந்த வறட்சியிலிருந்து பயிர்களை பாதுகாத்திட 1 லிட்டர் தண்ணீரில் 10மிலி பி,பி,எப்,எம்,(PPFM) என்ற மீதைலோ பக்டீரியா திரவக்கரைலை கலந்து பயிர்களின்மேல் தெளிப்பு செய்யலாம்,*

**6. வடகிழக்கு மண்டலம்**

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 - 8 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
- ✓ அடர்தீவன உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால் அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
- ✓ இளம் கன்றுகள் மற்றும் ஆட்டுக் குட்டிகளை குளிரின் தாக்கத்திலிருந்து பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் கொட்டகையின் தரை பகுதியின் தேவையான அளவு கூளத்தை பரப்பி மற்றும் மின்விளக்கு அமைத்து தேவையான வெப்பத்தை அளிக்கலாம்.
- ✓ நெற்பயிரில் தண்டுதுளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுரோட்டோபாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ நெற்பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 21°செ 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 8-14கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ➢ வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பழ வகை மரங்கள் மற்றும் மரவாசனை பயிர்களை சுற்றி வட்டப் பாத்திகள் அமைத்து நீரை சேமிக்கவும்.
- ➢ மிளகு : தரையில் படரும் ஓடு கொடிகளை தாங்கு மரங்களில் ஏற்றி விடவும்.
- ➢ ரப்பர் : பாலித்தீன் ரைன் கார்ட்-ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களில் பால் வெட்டலாம்.
- ➢ இஞ்சியில் மென் கிழங்கு அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றி விட வேண்டும். நோய் பரவாமல் தடுக்க ஒரு சத போர்டோ கலவையைப் பாத்திகளில் ஊற்ற வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**